www.tamilarangam.net

## யாழ். பல்கலைக்கழக

## மருத்துவ பீட விரிவுரையாளர்

# திருமதி ரஜனி திரணகம படுகொலை!

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளரும், புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி தற்போது இலண்டனில் வசித்து வரும் திருமதி நிர்மலா நித்தியானந்தனின் சகோதரியுமான திருமதி ரஜனி திரணகம அவர்கள் கடந்த 21 - 9 - 89ல் யாழ். பல்கலைக்கழகத் துக்கருகாமையில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த செங்கதிர், டில்லி, சின்ன அக்காச்சி ஆகியோரால் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கை — இந்திய அரசுகள் பேச்சுவார்த்தைகளின் மூலம் மேற்கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில், இந்திய அமைதிப் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை தாம் பூரணமாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, அதே சமயம் தமக்கு வேண்டாதவர்களையும் மாற்று இயக்கத்தவர்களையும், தமது போக்குக்கு இணங்காத புத்திஜீவிகளையும் கொலை செய்யும் நடவடிக்கைகளை புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பேரினவாத இலங்கை அரசின் கைக்கூலிகளாக மாறி, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரைப் படுகொலை செய்ததை தமிழ் பேசும் மக்கள் இலேசில் மறக்க முடியாது. இவ்வாறு அரசியல் தலைவர்களையும், அரச உயர் அதிகாரிகளையும், விரிவுரையாளர்களையும் கொலைசெய்வதையே தமது மரபாகக் கொண்டுள்ள புலிகளின் 'சமாதான வேஷத்தை' மருத்துவபீட விரிவுரையாளர் திருமதி ரஜனி திரணகமவின் கொலை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி பற்றியும், அவர்களின் எதிர்காலம் தொடர்பாகவும் முதலைக் கண்ணீர் வடிக்கும் மாணவர் அமைப்புகளும், ஏனைய வெகுஜன அமைப்புகளும் இக்கொலை தொடர்பாக இன்றுவரை மௌனம் சாதிப்பது எமக்கு வியப்பை அளிக்கின்றது. அதே சமயம் பல்கலைக்கழக நிர்வாகமும் அதன் விரிவுரையாளர்களும் மாணவர்களும் கூட இவ் ஈனத்தனமான கொலை நடவடிக்கையைக் கண்டிக்காமல் இருப்பது, இத்தகைய கொலை முயற்சிகள் மேலும் தொடர்வதற்கே உதவும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே, இதுபோன்ற கோழைத்தனமான கொலைகளின் மூலம் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம், இத்தகைய பாசிச நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ் பேசும் மக்கள் ஐக்கியப்பட்டுக் குரல் கொடுப்பதின் மூலம் இக் கும்பலின் நயவஞ்சகப் போக்கை அம்பலப்படுத்த முன்வரவேண்டும்.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

யாழ்ப்பாணம்
23 - 9 - 1989

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்